# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| O.S. No. 116/2019 | Date : 08.03.2023 | |
| Name: சின்னசாமி | S/o. | |
| Evidence Recorded Time: 12. P.M. to P.M | | |

**6 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –**

வழக்கை யார் போட்டார்கள் என்றால் தாவிடியான் வாரிசுகள் போட்டுள்ளார்கள். பிரமாண பத்திரிகையில உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். பட்டா மாற்றுவது தொடர்பாக அரசாங்கத்தின் மீது பரிகாரம் கேட்டுள்ளார்கள். சர்வே எண். பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. எந்த தேதியில் வந்து அளந்தார்கள் என்றால் 2 மாதத்திற்கு முன்பு அளந்தார்கள். வெள்ளையன் பெயரில் உள்ள பட்டாவை மாற்ற மனு கொடுத்த விவரம் தெரியும். அந்த மனு எப்போது கொடுத்தார்கள் என்பது தெரியாது. தாவிடியான் எனக்கு உறவினர். எனக்கு அவர் மாமா ஆவார். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றாலும், பொய் சாட்சி அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நிலத்தை அளக்கும்போது உடன் இருந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வெள்ளையன் பெயரில் வழங்கப்பட்ட பட்டா எந்த தேதியில் வழங்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது.

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.